## ஹோமியோபதி வைத்திய சபை - 2015

---

ஹோமியோபதி வைத்திய சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஹோமியோபதி வைத்திய சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 42,475 கிரயத்திலான 5 மருத்துவ உபகரணங்கள் மூலதனமாக்குவதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஹோமியோபதி வைத்திய சபையில் சேவையில் ஈடுபட்டிருந்த 18 பேருடன் கூடிய பதவியணியினருக்காக பணிக்கொடை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2..2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) | நிதிப்பிரமாணம் 395 | இரண்டு நடைமுறைக் கணக்குகளுக்காக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 756(1) | ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 15 ஆந் திகதியோ அல்லது அதற்கு அண்மித்தோ பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு 2016 யூலை 31 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 271,598 மிகையாக இருந்ததுடன், அதற்த எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 170,636 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 442,234 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது. மீளாய்வாண்டிற்காக

அரசின் மீண்டெழும் செலவின ஏற்பாடு ரூபா 5,798,043 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 74,938 மிகையாக இருந்ததுடன், 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதி விளைவுகள் முறையே ரூபா 29,305, ரூபா 111,977 மற்றும் ரூபா 170,636 ஆன பற்றாக்குறையாக இருந்தன. 2015 ஆம் ஆண்டின்போது அது ரூபா 271,598 மிகையொன்றாக இருந்தது. ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 4,544,910 தொகையான பங்களிப்பு 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 9,951,274 வரை 2 சதவீதத்திலிருந்து 111 சதவீதத்திற்கு இடைப்பட்ட தளம்பலுடன் அதிகரித்திருந்தது.

**3.2 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கைகள்**

வைத்திய சபையில் சேவை புரிந்த தொழிலாளிரொருவரால் அவரை சேவையிலிருந்து நீக்கியமைக்கு எதிராக ரூபா 3,000,000 நட்டஈடு கோரி வழக்கொன்றும் தற்காலிக மருத்துவர்களின் பதிவை நீக்கியமை, அவர்களின் பரீட்சைகளை நடாத்துவதற்கு இடமளிக்காமை மற்றும் இடைக்கால நிர்வாக சபை கலைக்கப்பட்மை போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த தரப்பினரால் 05 வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டிருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

1970 இன் 07 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம்

- ஹோமியோபதி முறைமையின் பிரகாரம் மருத்துவ கருமங்களில் ஈடுபடுவதனை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்தல், மேம்படுத்துதல் மற்றும் தைரியமூட்டுதல்.
- ஹோமியோபதி மருத்துவ விஞ்ஞானத்தை பின்பற்றலும் அது தொடர்பான ஆராய்ச்சிகளை தைரியப்படுத்துதல், ஹோமியோபதி வைத்திய கல்லூரியொன்றை தாபித்தல் மற்றும் அதனைப் பராமரித்துச் செல்லல்.
- ஹோமியோபதி மருத்துவ முறைமையின் பிரகாரம் நோய்கள் தொடர்பான ஆய்வு மற்றும் பொது சுகாதார மேம்பாட்டிற்கு நடவடிக்கை எடுத்தல் அபிவிருத்தி செய்தல் அல்லது தைரியப்படுத்துதல்.
- ஹோமியோபதி நிறுவனங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் மற்றும் ஹோமியோபதி மருந்து வகைகள், மருந்துகள், ஏனைய மருந்து கலவைகளின் உற்பத்தி, இறக்குமதி, விற்பனை மற்றும் விநியோகத்தினை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பன சபையின் நோக்கங்களாக குறிப்பிடப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டில் மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்குறித்த நோக்கங்களிலிருந்து ஹோமியோபதி முறைமையின் பிரகாரம் மருத்துவ கருமங்களில் ஈடுபடுவதை முறைப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல், ஹோமியோபதி மருத்துவ விஞ்ஞானத்தை பின்பற்றல் மற்றும் அது தொடர்பான ஆராய்ச்சிகளை தைரியப்படுத்துதல் போன்ற பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் பின்வருமாறு இருந்தது.

(i) 21 நடமாடும் சிகிச்சைகள் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 14 சிகிச்சைகள் நடாத்தப்பட்டிருந்தன.

(ii) ஹோமியோபதி வைத்திய முறைமையை அறிவூட்டும் 03 பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், சுகாதார அமைச்சினதும் சகல நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்காக கருத்தரங்குகளை நடாத்துதல், ஹோமியோபதி மருத்துவ முறைமை தொடர்பில் பிரசித்தப்படுத்துவதற்காக 05 தொலைக்காட்சி மற்றும் வானொலி கலந்துரையாடல்களை ஒழுங்கமைத்தல், Web Home Page ஒன்றை ஆரம்பித்தல் போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) ஹோமியோபதி மருத்துவர்களின் சேவை மற்றும் அனுபவம் என்பவற்றை மதிப்பீடு செய்வதற்கு 02 செயலமர்வுகளை நடாத்துவதற்கு திட்டப்பட்டிருந்த போதிலும், ஒரு செயலமர்வு மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(iv) ஹோமியோபதி வைத்திய சபைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பான நிர்வாக நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துதல், பிரமாணங்களை தயாரித்தல் மற்றும் வர்த்தமானியில் வெளியிடல், ஹோமியோபதி மருந்துப் பொருள் உற்பத்தி தொடர்பாக சந்தையில் கிடைக்ககூடிய தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உப விதிகளைத் தயாரித்தல், ஹோமியோபதி மருந்துக் களஞ்சியம் மற்றும் ஒசுசல என்பவற்றை ஸ்தாபிப்பதற்காக நிதியத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மருந்து இருப்புக்களை இறக்குமதி செய்து பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அது தொடர்பாக எவ்வித செயற்பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டின் போது தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குரிய சட்டரீதியான சட்டகத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் 2016 நவம்பர் 01 ஆந் திகதி வரையிலும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,199,254 பெறுமதியான நிலையான சொத்துக்களும் அதற்குரிய கட்டிடங்களும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 2012 சனவரி 05 ஆந் திகதி நடைபெற்ற இடைக்காலக் குழுக் கூட்டத்தின் போது 7 சிகிச்சை நிலையங்களுக்கான பொதுவான பணிப்புரை வழிகாட்டலொன்றை தயாரிப்பதற்கும் 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதி நடைபெற்ற இடைக்கால குழுக் கூட்டத்தின்போது 14 புதிய சிகிச்சைகளுக்காக பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஹோமியோபதி கல்வி நிறுவனம் தொடர்பாக விதிகள் மற்றும் தேவைப்பாடுகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், 2014 சனவரி 08 ஆந் திகதி நடைபெற்ற இடைக்காலக் குழுக் கூட்டத்தின் போது ஹோமியோபதி மருந்துகள் உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பான 1981 இன் ஹோமியோபதி கட்டளைகளை மேலும் விரிவுபடுத்தி போதியளவில் சட்டங்கள், பிரமாணங்கள் என்பவற்றை தயாரிப்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதியான 2016 யூலை 04 ஆந் திகதி வரையிலும் அத்தீர்மானங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த பதிவினை புதுப்பிப்பதற்காக பணம் செலுத்தப்படாத மருத்துவர்களை இனங்கண்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடாத்தப்பட்ட 7 சிகிச்சைகளில் வருடாந்தம் சிகிச்சை பெறுகின்ற நோயாளர்களின் சராசரி 55,000 பேர் மாத்திரமாக இருந்ததுடன், அவர்களுக்காக வருடாந்த சராசரி நுகர்வு 220,000 குப்பிகளாக இருந்தும், மீளாய்வாண்டினுள் ரூபா 1,145,241 தொகை செலவிடப்பட்டு சிறிய மருந்து கொள்கலன் (குப்பிகள்) பாரியளவில் 1,764,000 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மருத்துவ சபைக்குச் சொந்தமாக போதியளவும் தரமானதுமான களஞ்சிய வசதிகள் இல்லாதிருக்கையில் 8 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு போதுமான இருப்பொன்றைக் கொள்வனவு செய்வதற்காக பாரியளவு பணம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்ாண்டின்போது மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள மருத்துவர்களுக்கு விற்பனை செய்யும் நோக்கில் ரூபா 62,000 செலவிடப்பட்டு 500 மருத்துவ சான்றிதழ் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2016 யூலை மாதம் வரையிலும் 13 புத்தகங்கள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளக் கணக்காய்வு**

ஹோமியோபதி வைத்திய சபையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்படுத்தப்படாமல் இருந்ததுடன், சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் கணக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மருத்துவ சபையிடம் வாகனமொன்று காணப்படாத போதிலும், வாகனப் பராமரிப்பு செலவினமாக ரூபா 500,000 உம், எரிபொருளுக்காக ரூபா 180,000 உம் பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், பாதீட்டில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த 11 விடயங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,974,774 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் பாதீட்டின் பிரகாரம் 13 செலவின உருப்படிகளில் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**5.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

நிகழ்காலத்திற்குப் பொருந்தும் வகையில் ஹோமியோபதி சபையின் பிரமாணங்கள் நாளதுவரையாக்கப்பட வேண்டுமென 2010 செப்தெம்பர் 15 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கணக்குக் குழு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி அளவிலும் ஹோமியோபதி மருத்து சபை நியமிக்கப்படாததன் கரணமாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அக்கட்டளை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. அடிப்படை பயன்பாட்டு புத்தகங்கள் மற்றும் பேரேடுகளுடன் கூடிய கணக்குகளை பராமரித்து செல்வது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.